**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.182/2024**
**வழக்கு சாட்சி P.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.கே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சரோஜினி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : ரங்கசாமிநாயக்கர் | கணவர் பெயர் | : ரங்கசாமிநாயக்கர் |
| கிராமம் | : சத்திரப்பட்டி | வயது | : சுமார் 89 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 09.10.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை :

நான் இவ்வழக்கில் 1ம் வாதி என்றால் ? சரிதான். பத்மாவதி, சரஸ்வதி, கமலம் ஆகியோர்கள் எனது சகோதரி என்றால் ? சரிதான். பாப்பாத்தி என்கிற திருமலையம்மாள் எனது தாயார். குணசேகரன் என்பவர் சரஸ்வதியின் கணவர். வம்சாவழி பட்டியலில் சரஸ்வதியின் கணவர் பெயரை தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். இந்த வழக்கினை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். யாருடைய சொத்தில் பாகம் வேண்டும் என்று கேட்டுள்ளேன் என்றால் ? எனது பாட்டி செல்லம்மாள் சொத்தில் பாகம் வேண்டு என்று கேட்கிறேன். தாவா சொத்துக்கள் செல்லம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் ? ஆமாம். செல்லம்மாள் என்பவருக்கு ஏற்கனவே வழக்கு நடந்து வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பின் தன்மைபடி சொத்துக்கள் கிடைத்துள்ளது என்றால் ? சரிதான். எனது பாட்டி செல்லம்மாளுக்கு 3 ஆண் மக்கள், ஒரு பெண் மகள் என்றால் ? சரிதான். முத்துச்சாமி என்பவர் திருமணம் இல்லாமல் இறந்துவிட்டார் என்றால் ? சரியல்ல. திருமணம் ஆகி குழந்தைகள் இல்லாமல் இறந்துவிட்டார். முத்துச்சாமியின் மனைவி பெயர் எனக்கு தெரியாது.

வெங்கடாசலம், அழகர்சாமி, எனது தாயார் பாப்பாத்தி என்கிற திருமலையம்மாள் ஆகிய மூவருக்கும் வாரிசு அடிப்படையில் செல்லம்மாளின் சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்றால் ? ஆமாம். ஆண் வாரிசுகளுக்கு வேறு சொத்துக்களை கொடுத்துவிட்டார்கள் என்றாலும், எனது தாயாருக்கு தாவா சொத்துக்களை கொடுத்துவிட்டார்கள் என்றால் ? ஆமாம். எனது தாயாரின் பெயருக்கு தாவா சொத்துக்கள் ஒதுக்கப்பட்ட பிறகு வருவாய்துறையில் பெயர் மாற்றங்கள் ஏற்பட்டு எனது தாயார் தாவா சொத்துக்களை அனுபவித்து வந்தார் என்றால் ? ஆமாம். எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எனது தாயார் 2-ம் பிரதிவாதி சுந்தரராஜ் என்பவருக்கு சொத்துக்களை குத்தகைக்கு விட்டு அனுபவித்து வந்தார் என்றால் ? ஆமாம். அவ்வாறு குத்தகைக்கு விட்டு அனுபவித்து வந்ததில் அழகர்சாமியின் வாரிசுகள் பிரச்சனை செய்து அவர்களுக்குள் வழக்கு நடைபெற்று வந்தது என்றால் ? ஆமாம். அந்த வழக்கில் சுந்தரராஜன் என்பவருக்கு சாதகமாகவும், அழகர்சாமியின் வாரிசுகளுக்கு எதிராகவும் தீர்ப்பாகியுள்ளது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. 2-ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் அ.வ.எண்.130/2007 என்ற வழக்கு பற்றி சொல்லியுள்ள நிலையில் மேற்படி வழக்கு பற்றிய விபரங்களை தெரிந்து கொண்டேனா என்றாலும், தற்போதாவது தெரிந்து கொண்டேனா என்றால் ? இல்லை. அழகர்சாமி நாயக்கருக்கு ஒரு மகன், ஒரு மகள் குழந்தைகள் ஆவார்க்ள. மகள் பெயர் அனுராதா என்றால் ? சரிதான். மகன் பெயர் லெட்சுமிநாராயணன். அனுராதா குடும்பத்திற்கும், எனக்கும், எனது சகோதரிகளுக்குள்ளும் பேச்சுவார்த்தை உள்ளது என்றால் ? பேச்சுவார்த்தை உண்டு. அனுராதாவின் கணவருடன் தான் நான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் ? ஆமாம். அனுராதா என்பவர் தனக்கு பாகம் உள்ளதாக கூறி 2 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் இவ்வழக்கு வாதிகள் மற்றும் 1-ம் பிரதிவாதிக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.302/2022 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ? சரிதான். அந்த வழக்கில் நாங்கள்

எதிர்வழக்குரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்ததில் சொத்தானது அனுராதாவிற்கு பாத்தியம் இல்லை என்று வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் ? ஆமாம். அந்த வழக்கில் திருமலையம்மாள் 2–ம் பிரதிவாதியின் மனைவி சாந்தாவிற்கு எழுதிக் கொடுத்துள்ள கிரையம் ஊர்ஜிதம் செய்யப்பட்டு அந்த வழக்கானது தள்ளுபடி ஏற்பட்டுவிட்டது என்றால் ? எனக்கு தெரியாது. மேற்படி அசல் வழக்கு எண்.302/2022 என்ற வழக்கானது தள்ளுபடி ஏற்பட்ட பிறகு பாப்பாத்தி என்கிற திருமலையம்மமாள் தனது மகள்களில் ஒருவரான சரஸ்வதி பெயரில் உயில் ஆவணம் எழுதி வைத்ததாகவும், தாவா சொத்துக்கள் இவ்வழக்கு 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியம் என்றும், இவ்வழக்கு 2 முதல் 4 பிரதிவாதிகள், இவ்வழக்கு வாதிகள் மற்றும் மற்றொரு சகோதரியான இறந்துபோன கமலத்தின் மீதும் அ.வ.எண்.276/2023 என்ற வழக்கினை தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அ.வ.எண்.276/2023 வழக்கினை தொடர்ந்து நடத்தாமல் அந்த வழக்கானது கடந்த 21.03.2024ம் தேதி தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரங்களை 2–ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார்கள் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது.

(தொடர்ச்சியான குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.10.09 18:42:14 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்